தேவைப்படுகிறது என்பது முக்கிய காரணமாகும். அதைச் சுரங்கப் பாதையாக அமைக்கலாமா அல்லது மேம்பாலமாக அமைக்கலாமா என்ற கருத்து ஆராயப்பட்டது. அதற்கிடையிலே, இப்போது இருக்கிற சில அமைப்பு முறைகளையே மாற்றி, பாதைகளை மாற்றி "ஆல்டெர்னேடிவ் ரூட்ஸ்" ஆக வேறு வழிப்பாதையாக அமைக்க வாய்ப்பு இருக்கிறதா, அப்படி அமைப்பதன் மூலம் போக்குவரத்து நெரிசலை எந்த அளவிற்குத் தவிர்க்க முடியும் என்பது ஆராயப்பட்டது. இப்படிப்பட்ட நிலையிலே தான் சுரங்க இரயில் பாதை, சுரங்கப் பாதை ஆகிய திட்டங்கள் பரிசிலிக்கப்பட்டு வருகின்றன. இவைகளைப் பற்றிய ஆய்வுகள்—பரிசீலனை—முடிந்த பிறகு, எது சாத்தியமோ அது நிறைவேற்றப்படும்.

கொளுஞ்சிப்பட்டியில் புதிய ஏரி

*** 153. வினா—திரு. சீ. க. வடிவேலு:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டத்தைச் சார்ந்த கரிகாலி ஊராட்சியிலுள்ள கொளுஞ்சிப்பட்டியில் புதியதாக ஏரி அமைக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

சிவாயம் குளம்

*** 154 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளித்தலை வட்டம், சிவாயம் குளம் புதுப்பிக்கப்படும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வேலை நடைபெற்று வருகின்றது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த சிவாயம் குளத்திற்கு நிலம் கையாகப்படுத்தப்பட்டு, நிலச் சொந்தக்காரர்களுக்கு நஷ்டயீடு கொடுக்கப்பட்டதா? இல்லை என்றால் விரைவிலே கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?